தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
சென்னை–6

ந.க.எண்.040678 / சி3 / இ1 / 2021 நாள்28.04.2022

பொருள்: பள்ளிக் கல்வி – 01.08.2021 அன்றைய நிலவரப்படி அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர் நிர்ணயம் செய்தமை – உபரிப் பட்டதாரி ஆசிரியர்களை பணிநிரவல் செய்தமை – கூடுதல் தேவையுள்ள பணியிடங்களுக்கு பணிநிரவல் ஆணை பெற்றவர்கள் – IFHRMS மூலம் ஊதியம் வழங்க அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் விவரம் கோருதல் சார்பு.

பார்வை: 1)இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்.13.1.2022
2)சம்மந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் செயல்முறைகள் நாள்.14.3.2022

–0–

01.08.2021 அன்றைய நிலவரப்படி அரசு/நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 10 வகுப்பு வரை உள்ள பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு ஆசிரியரின்றி உபரிஎனக் கண்டறியப்பட்ட (Surplus Post With person) பட்டதாரி ஆசிரியர்களை அந்தந்த மாவட்டத்திற்குள் உள்ள நிரப்பத்தகுந்த காலிப்பணியிடம் / கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு கடந்த 14.3.2022 அன்று EMIS இணையதள வாயிலாக பணிநிரவல் கலந்தாய்வு நடைபெற்று முடிந்துள்ளது.

மேற்படி பணிநிரவல் கலந்தாய்வில் கலந்து கொண்டு கூடுதல் தேவையுள்ள பள்ளிகளை தெரிவு செய்து (Need Post) ஏற்கனவே பணிபுரிந்த (உபரி பள்ளி) பள்ளியின் அனுமதிக்கப்பட்ட பணியிடத்துடன் (Sanctioned Post) பணிநிரவல் மூலம் ஆணை பெற்றவர்கள் மாத ஊதியம் பெறுவதில் தங்களது பணியிடம் IFHRMS இணையத்தில் பதிவேற்றம் செய்ய முடியாத நிலை ஏற்படுவதாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

எனவே 14.3.2022 அன்று நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணிநிரவல் கலந்தாய்வில் கலந்து கொண்டு கூடுதல் பணியிடங்களை தெரிவு செய்து பணிநிரவல் மூலம் மாறுதல் ஆணை பெற்றவர்களின் பணியிடங்களை IFHRMS இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கு ஏதுவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் Mx-Excel Sheetல் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து (Scan செய்யாமல்) உரிய விவரங்களை பூர்த்தி செய்து jdpcc2018@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிட்ட நகலொன்றினையும் 30.4.2022க்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: படிவம்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

28/4

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(மின்னஞ்சல் மூலமாக)

## Surplus / Need Post New Station Creation Form

| Sl. No | Old School Details | | | | | | | | New School Details | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | HOD Code | TO Code | Old DDO Code | IFHRMS Code | School Name | Employee ID | Post Name | Post with Position ID | TO Code | OLD DDO Code | IFHRMS Code | School Name | Date of Effect |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

Chief Educational Officer